பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

01 03 2025 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மின்னணுப்பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மணிப்பூரின் சட்டம் - ஒழுங்கு சூழ்நிலை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுதில்லியில் ஆய்வு மேற்கொண்டார்.
- பிரதமரின் மக்கள் மருந்தகங்களின் பலன்களை அனைவரும் பெற வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.
- தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- இலங்கை சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Adita Rao** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<<>>>>>**

மின்னணுப்பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் தொழில்துறையினருக்கு மிகுந்த பயன் அளித்துள்ளதாக கூறினார்.

இணையதள வசதி பயன்பாடு அதிகரித்துள்ளதன் காரணமாக, மொபைல் போனை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

நாடு முழுவதும் கடந்த பத்தாண்டுகளில் 2 கோடிக்கும் மேற்பட்ட குடியிருப்புகளுக்கு முதல் முறையாக மின் வசதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

புழக்கத்தில் இல்லாத பழைய சட்டங்கள் திரும்பப்பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு இலக்கையும் மக்கள் பங்களிப்புடன் எளிதாக எட்ட முடியும் என்பதை இந்தியா உலகிற்கு உணர்த்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு வெளிநாடுகளில் வர்த்தக வாய்ப்புகள் தற்போது கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறு தானியங்கள் பயன்பாடு சர்வதேச அளவில் வரவேற்பை பெற்றுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

காபி ஏற்றுமதியிலும் இந்தியா முன்னணியில் உள்ளதாக அவர் கூறினார்.

முதலீட்டிற்கான உகந்த சூழ்நிலையை மத்திய அரசு ஏற்படுத்தித் தந்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா மணிப்பூரின் சட்டம் -ஒழுங்கு சூழ்நிலை குறித்து புதுதில்லியில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

அம்மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்ட பின்னர், இந்த கூட்டம் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மணிப்பூர் ஆளுநர் திரு அஜய் குமார் பல்லா மற்றும் உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>

பிரதமரின் மக்கள் மருந்தகங்களின் பலன்களை அனைவரும் பெற வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த மருந்தகங்கள் தொடர்பான யாத்திரையை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த மருந்தகங்களில் குறைந்த விலையில் மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் பயனடைந்தவர்கள் அதுகுறித்த விவரங்களை தங்களது உறவினர்களிடம் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த மருந்தகங்கள் மக்கள் இயக்கமாக உருவெடுக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

பொதுமக்களுக்கு குறைந்த செலவில் மருந்துகள் கிடைக்க வேண்டும் என்பதை தாரக மந்திரமாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல், நாடு முழுவதும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்கள் செயல்பாட்டில் உள்ளதாக கூறினார்.

இந்த மருந்தகங்களின் பலன்கள் குறித்து கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் புற்றுநோய்க்கான தடுப்பு மருந்து பயன்பாடு குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு அஜித் பவார் கூறியுள்ளார்.

இன்று புனேயில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், புற்றுநோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது கவலைக்குரியது என்றார்.

பெண் குழந்தைகளுக்கும், மகளிருக்கும் புற்றுநோய்க்கான தடுப்பு மருந்தை எவ்வாறு வழங்குவது என்பது குறித்து முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ், சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் உயதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

இதுதொடர்பாக விரைவில் முடிவெடுக்கப்படும் என்றும் திரு அஜித் பவார் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

உத்தராகண்டில் பனிச்சரிவில் சிக்கிய 55 தொழிலாளர்களில் இதுவரை 47 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

எல்லைப்பகுதி சாலை மேம்பாட்டு நிறுவனத்தில் பணியாற்றும் இந்த தொழிலாளர்களை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி ஆய்வு செய்தார்.

இதுதொடர்பாக, பாதுகாப்புப்படை அதிகாரிகளுடன் அவர் விரிவாக ஆலோசனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மீட்கப்பட்ட 47 பேரில் மூன்று பேர் ராணுவ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

எஞ்சியவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ராணுவத்தின் நான்கு ஹெலிகாப்டர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் பிறந்தநாள் கொண்டாடும் இரு தலைவர்களுக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>

சத்தீஸ்கரில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இரண்டு நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சுக்மா மாவட்டத்துக்கு உட்பட்ட **Kistaram** வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து, பாதுகாப்புப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதன்காரணமாக, இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நடைபெற்றதாகவும், இதில் நக்சலைட்டுகள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அப்பகுதியில் இருந்து ஏராளமான ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>

பஞ்சாபில் போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பது தொடர்பான உயர்நிலைக்குழு கூட்டம் சண்டிகரில் இன்று நடைபெற்றது.

அம்மாநில நிதியமைச்சர் திரு **Harpal Singh Cheema** தலைமையில் இந்த உயர்நிலைக்குழு கூட்டம் நடைபெற்றது.

போதைப்பொருள் புழக்கத்தை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, திருவாரூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 41 செகண்ட்ஸ்)*

இந்நிலையில், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழை காரணமாக, குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - செந்தில் - 36 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இலங்கை சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Adita Rao** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-17, 21-16 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Shreya Lele** –வை வென்றார்.

<<<<<<>>>>>

ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Dhruv Kapila – Tanisha Crasto** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 21-14, 21-17 என்ற செட் கணக்கில், சீனாவின் **Gao Jia Xuan – Wu Meng Yang** இணையை வென்றது.

<<<<<<>>>>>

**Montenegro**-வில் நடைபெற்றுவரும் உலக ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியின் நான்காவது சுற்று முடிவில் இந்தியாவின் பிரணாவ் வெங்கடேஷ் முதலிடத்தில் உள்ளார்.

<<<<<<>>>>>

**Monaco-**வில் நடைபெற்ற சர்வதேச மகளிர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Koneru Humpy** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

<<<<<<>>>>>

**Prague** மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் முதலிடத்தில் உள்ளார்.

<<<<<<>>>>>

வதோதராவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் பாலமுருகன் ராஜசேகரன் - ஜெனிஃபர் வர்கிஸ் இணை தங்கப்பதக்கம் வென்றது.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை இந்தியாவின் **Taneesha Kotecha – Preyesh Suresh** இணையை வென்றது.

15 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் அனன்யா முரளிதரன் - ரித்விக் குப்தா இணையும் தங்கப்பதக்கம் வென்றது.

<<<<<<>>>>>